**வவுனியா வடக்கு பிரதேச சபை**

**வவுனியா மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்

2018 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 29 மார்ச் 2019 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை 30 யூன் 2019 ஆந் திகதியும் விரிவான முகாமைத்துவ அறிக்கை 31 ஒக்ரோபர் 2019 ஆந் திகதியும் சபையின் தலைவருக்கு அனுப்பப்பட்டுள்ளது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினைத் தவிர்த்து வவுனியா வடக்கு பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்களில் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

**(அ) நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(2) உப பிரிவிற்கமைய வருடாந்த செயலாற்றல் அறிக்கை நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்துடன் இணங்கி ஒழுகுதல் வேண்டும் | வருடாந்த மீளாய்வு அறிக்கை அடுத்த மீளாய்வாண்டிலிருந்து நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |

**(ஆ) கணக்கீட்டு கொள்கைகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையினால் நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்காக பின்பற்றப்பட்ட கணக்கீட்டு கொள்கைகள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | கணக்கீட்டு கொள்கைகள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டும். | சபையின் நிதிக்கூற்றுகள் தயாரிக்கும் போது அவற்றை சமர்ப்பிக்கும் போது வெளிப்படுத்தப்படவேண்டிய கணக்கீட்டுக் கொள்கைகள் அடுத்த மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டு சீர் செய்யப்படும். |

**(இ) கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| கணக்காய்வு அவதானிப்புகள் | | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | சபையினுடைய அனைத்து தளபாடப் பொருத்துக்கள், அலுவலக உபகரணங்கள், மற்றும் பொறித்தொகுதிகள் என்பனவற்றின் பெறுமதிகள் குறிப்பிடப்பட்டு கணக்குகளில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | சபையினுடைய அனைத்து சொத்துக்களின் பெறுமதிகள் குறிப்பிடப்பட்டு நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படவேண்டும | சபையின் அனைத்து சொத்துக்களின் பெறுமதிகள் பெறுமதி மதிப்பிடப்படாமையால் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படவில்லை அடுத்த மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டு சீர் செய்யப்படும். |
| (ஆ) | சபையின் 01 நிலையான வைப்பு தொடர்பிலான மீளாய்வாண்டிக்குரிய வட்டி வருமானம் வருமானச்செலவுக்கணக்கில் காட்டப்பட்டிருக்கவில்லை | மீளாய்வாண்டிக்குரிய வட்டி வருமானம் வருமானச்செலவுக்கணக்கில் காட்டப்படவேண்டும் | சபையில் மொத்தமாக 10 நிலையான வைப்புக்கள் காணப்படுகின்றன. அவற்றில் 02 கணக்கின் வட்டி மாதாந்தம் சபையின் நடைமுறை கணக்கில் வைப்புச்செய்யப்பட்டுள்ளது. 2449422 கணக்கின் முதிர்வு காலம் 2021 ஆகையால் 2021 இல் வட்டி பெறப்படும். |

**(ஈ) கணக்காய்விற்கு தேவையான எழுத்துமூல சான்றுகள் இல்லாதிருந்தமை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ரூபா 107,245,205 பெறுமதியான 04 கணக்கு விடயங்களுக்குரியதாக எதிரில் குறிப்பிடப்பட்டுள்ள சான்றுகள் சமர்ப்பிக்கப்படாமையால் கணக்காய்வின் போது அவற்றை திருப்திகரமாக மதிப்பாய்வு செய்ய முடியாதிருந்தது. | உறுதிப்படுத்தும் சான்றுகள் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். | காணி ஆவணங்கள் பெற்றுக்கொள்வதற்கான விண்ணப்பப்படிவங்கள் பிரதேச செயலாளரிற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது எனினும் எந்தவொரு ஆவணங்களும் கிடைக்கப்பெறவில்லை. அத்துடன் நிலையான சொத்து பதிவேடு பேணுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். |

### 1.4 இணக்கமின்மைகள்

-----------------------

### 1.4.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

--------------------------------------------------------------------------------------------

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | 1987 ஆம் ஆண்டின் 15 இலக்க பிரதேச சபைகள் அதிகார சட்டத்தின் 93 ஆம் பிரிவு | சபையினால் சட்ட ஏற்பாடுகள் மூலம் கழிவு முகாமைத்துவ செயற்பாடுகள் இடம்பெறவில்லை | வருடாந்த திட்டத்தினுள் கழிவு முகாமைத்துவம் உள்ளடக்கப்பட வேண்டும் | அடுத்த மீளாய்வாண்டிலிருந்து நடைமுறைப்படுத்தப்படும். |
| (ஆ) | 1952 இன் 6 ஆம் இலக்க உள்ளுராட்சி அதிகார சபையிகளின் நிறைவேற்றப்பட்ட இடைக்கால சட்ட ஏற்பாடுகளின் XI மற்றும் XII ஆம் பகுதிகள் | கழிவு முகாமைத்துவம் வருடாந்த திட்டத்தினுள் உள்ளடக்கப்பட்டு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | | அடுத்த மீளாய்வாண்டிலிருந்து நடைமுறைப்படுத்தப்படும். |
| (இ) | 1980 இன் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் அதிகாரச்சட்டம் | கழிவு முகாமைத்துவம் தொடர்பில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை | அதிகாரச்சட்டத்தின் அறிவுறுத்தல்களுக் கமைய செயற்பட வேண்டும் | அடுத்த மீளாய்வாண்டிலிருந்து நடைமுறைப்படுத்தப்படும். |
| (ஈ) | 1988 ஆம் ஆண்டின் பிரதேச சபைகள் நிதி, நிருவாக ஒழுங்கு விதிகள் | | | |
| (i) | விதி இலக்கம் 59 | ஒவ்வோராண்டு தொடக்கத்திலும் அரசிறைச் சோதனைக்காரர் அரசிறை மேற்பார்வையாளர் அல்லது தலைவரால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் வேறு உத்தியோகத்தர் சபைப் பிரதேசத்தில் கணிப்பீடொன்றை மேற்கொண்டு 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 150(1) ஆம் பிரிவிற்கு அமைவாக வியாபாரங்கள் பற்றிய நிரல் ஒன்றைத் தயாரிக்கப்பட்டிருக்காமையால் வியாபார வரிகள் அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பிரதேச சபைகளின் ஒழுங்கு விதிகளுக்கமைய செயற்பட வேண்டும் | இனிவரும் காலங்களில் வியாபாரங்கள் பற்றிய நிரல் தயாரிக்கப்பட்டு வியாபார வரிகள் அறவிட நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ii) | விதி இலக்கம் 218 | காணிகள் கட்டடங்கள் யாவும் ஒவ்வோராண்டும் ஆகக் குறைந்தது ஒரு முறை தவிசாளரினால் சோதனை செய்விக்கப்பட்டிருக்கவில்லை | பிரதேச சபைகளின் ஒழுங்கு விதிகளுக்கமைய செயற்பட வேண்டும் | காணி ஆவணங்கள் பெறப்படவில்லை என்பதனால் சோதனை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை |
| (iii) | விதி இலக்கம் 33 | சோலை வரி சம்பந்தமான கணிப்பீடொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை | பிரதேச சபைகளின் ஒழுங்கு விதிகளுக்கமைய | ஆரம்ப கட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | செயற்பட வேண்டும் | |
| **(iv)** | பாகம் III இன் பிரிவு 32 | மீளாய்வாண்டிற்கான ஆதன வரி மதிப்பீடு தொடர்பான மதிப்பீட்டுப் பதிவேடு பேணப்பட்டிருக்காமை | பிரதேச சபைகளின் ஒழுங்கு விதிகளுக்கமைய செயற்பட வேண்டும். | ஆதனவரி அறவிடப்படாமையால் பதிவேடு பேணப்படவில்லை. |
| **(உ)** | **இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவை** | | | |
| | அத்தியாயம் xxiv இன் பிரிவு 4 | சபையின் 02 அலுவலகர்களுக்கு வழங்கப்பட்ட கடன்கள் ரூபா 94,384 தொகையினை கடந்த 05 வருடங்களுக்கு மேலாக அறவீடு செய்ய ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை | உரிய விதிகள் / சுற்றறிக்கையின் அறிவுறுத்தல்களுக் கமைய செயற்பட வேண்டும். | குறித்த நபர்களை தொடர்புகொள்ள முடியாதுள்ளது. |
| **(ஊ)** | **இலங்கை சனநாயக் சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணங்கள்** | | | |
| **(i)** | நிதி ஒழுங்குவிதி 110 | நட்டங்கள் தொடர்பான பதிவேடுகள் பராமரிக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணங்க ளுக்கு அமைய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | இனிவரும் காலங்களில் பேணப்படும். |
| **(ii)** | நிதி ஒழுங்குவிதீ 571 | காலங்கடந்த வைப்புக்கள் தொடர்பில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை | நிதிப்பிரமாணங்க ளுக்கு அமைய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | காலங்கடந்த வைப்புக்கள் தொடர்பில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். |
| **(iii)** | நிதி ஒழுங்குவிதி 891 | பிணைப் பண இடாப்பு பேணப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணங்க ளுக்கு அமைய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | இனிவரும் காலங்களில் பேணப்படும். |
| **(எ)** | **இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் பெறுகை வழிகாட்டி கைநூல்** | | | |
| **(i)** | பிரிவு 178(3) | திறமையான ஒப்பந்த வேலைகளை முன்னெடுத்திருக்கும் சமூகமட்ட அமைப்புக்கள், சனசமூக நிலையங்களின் பெயர்களைக் கொண்ட பதிவேடு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | பெறுகை வழிகாட்டிகளுக்கும் அறிவுறுத்தல்களுக் கமைய செயற்பட வேண்டும். | இனிவரும் காலங்களில் பேணப்படும். |
| **(ஏ)** | 2009 ஏப்பிரல் 16 ஆந் திகதிய 09/2009 ஆம் இலக்க அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கையின் 02 ஆம் பந்தியின் IV பிரிவு | நேரத்தின் அடிப்படையில் மேலதிக நேரம் மற்றும் விடுமுறை நாள் சம்பளங்கள் போன்ற நிரந்தர கடமை நேரத்திற்குப் பின்னராக செலுத்தப்படும் படிகளின் விடயத்தில் நேரத்தை அடிப்படையாகக் கொள்வதாயின் அந்நேரத்தை விரலடையாளப் | சுற்றறிக்கையின் அறிவுறுத்தல்களுக் கமைய செயற்பட வேண்டும். | 2019 ஆம் ஆண்டு தொடக்கம் விரலடையாளத்தை கருத்தில் கொண்டு மேலதிக நேரம் மற்றும் விடுமுறை நாட்கொடுப்பனவு வழங்கப்பட்டு வருகின்றது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | | பதிவு மூலம் உறுதிப்படுத்தப்படல் வேண்டும் இருந்தபோதிலும் சபையின் விரலடையாளப் பதிவு மூலம் உறுதிப்படுத்தப்படாமல் மேலதிக நேர மற்றும் விடுமுறை நாள் சம்பளங்கள் ரூபா 423,117 செலுத்தப்பட்டிருந்தது | | |
| (ஐ) | 2016 திசெம்பர் 29 ஆந் திகதிய 30/2016 ஆம் இலக்க அரசாங்க நிர்வாக சுற்றறிக்கையின் 03 ஆம் பந்தி | ஒவ்வொரு வருடத்திற்கு ஒரு முறை எரிபொருளினால் தாங்கியை பூரணமாக நிரப்பி ஓட்டத்தில் ஈடுபடுத்தி எரிபொருள் நுகர்வினை பரீட்சிக்க வேண்டிய போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை | சுற்றறிக்கையின் அறிவுறுத்தல்களுக் கமைய செயற்பட வேண்டும். | 2019 ஆம் ஆண்டு தொடக்கம் ஒவ்வொரு வருடமும் வாகனங்களிற்கான எரிபொருள் பரிசோதனை மேற்கொள்ளப்படும். |
| (ஒ) | திறைசேரியின் 28 நொவெம்பர் 2002 ஆம் திகதிய சுற்றறிக்கை இல IAI/2002/02 | கணிணி மற்றும் அதன் உதிரிப்பாகங்கள் தொடர்பான பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கையின் அறிவுறுத்தல்களுக் கமைய செயற்பட வேண்டும். | இனிவரும் காலங்களில் பேணப்படும். |
| (ஓ) | நிதி மற்றும் வெகுசன ஊடக சொத்து முகாமைத்துவ அமைச்சின் 2017 யூன் 28 ஆம் திகதிய 01/2017 சொத்து முகாமைத்துவச் சுற்றறிக்கை | நிலையான சொத்து தொடர்பான பதிவேடுகள் பராமரிக்கப்பட்டிருக்கவில்லை. என்பதுடன் சபையின் அனைத்து சொத்துக்களையும் ஆவணப்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கையின் அறிவுறுத்தல்களுக் கமைய செயற்பட வேண்டும். | நிலையான சொத்துக்கள் பதிவேட்டை பராமரிக்க நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் சொத்துக்களை ஆவணப்படுத்துவதற்கான நடவடிக்கையும் மேற்கொள்ளப்படும். |

### 1.4.2 வரித் தேவைப்பாடுகளுடன் இணங்காமை

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையின் பெறுமதி சேர் வரி (VAT) தொடர்பான கொடுக்கல் வாங்கல்களின் போதான பெறுமதி சேர் வரிக் கொடுப்பனவு ஆனது பெறுகை வழிகாட்டி நெறிகள் 2006 இன் 5:4:12 இன் பிரகாரம் பண்டங்கள் அல்லது கட்டுமான வேலைகள் மீதான பெறுமதி சேர் வரித்தொகையானது பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரர்களுக்கு அல்லது வழங்குனர்களுக்குச் செலுத்தப்படுதல் வேண்டும். அத்தகைய கொடுப்பனவுகள் பற்றிய விபரங்கள் அடுத்து வரும் மாதத்தின் 15 ஆம் நாளன்று அல்லது அதற்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கான ஒரு பிரதியுடன் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் தலைமையதிபதிக்கு அறிவிக்கப்படுதல் வேண்டும். இருந்த போதிலும் ரூபா 637,020 தொகையான பெறுமதி சேர் வரி தொடர்பான கொடுப்பனவுகள் தொடர்பில் கணக்காய்விற்கு அறியக் கொடுக்கப்பட்டிருக்கவில்லை. | பெறுமதி சேர் வரி மற்றும் பெறுகை வழிகாட்டி நெறிகளின் அறிவுறுத்தல்களுக் கமைய செயற்பட வேண்டும். | சபையின் VAT தொடர்பான அறிக்கை கணக்காய்விற்கு அறியதருவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 12,014,163 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொப்பான முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 14,529,883 தொகையாக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | | 2018 | | | | 2017 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| இல. | வருமான மூலம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவைகள் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவைகள் |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | - | - | - | - | - | - | - | - |
| (ii) | வாடகைகள் | 5,083,000 | 8,193,746 | 5,428,263 | 2,765,483 | 4,270,000 | 6,248,305 | 5,174,410 | 1,073,895 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 940,000 | 793,166 | 793,166 | - | 725,000 | 3,390,165 | 3,390,125 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 9,237,000 | 11,709,798 | 5,902,629 | 5,807,169 | 8,265,000 | 14,530,648 | 9,645,776 | 4,884,872 |
| | **மொத்தம்** | **15,260,000** | **20,696,710** | **12,124,058** | **8,572,652** | **13,260,000** | **24,169,118** | **18,210,351** | **5,958,767** |

#### 2.2.2 வருமான சேகரிப்பின் செயலாற்றல்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | அரசிறை கடனாளிடம் இருந்து பெற வேண்டிய ரூபா 20,563,277 தொகை 31 திசெம்பர் 2018 வரை அறவிட நடவடிக்கை சபையினால் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை | சபையினால உரிய காலத்தில் வருமானங்களை அறவிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் | மானியம், நீதிமன்ற குற்றப்பணம், முத்திரை தீர்வை தவிர்ந்த அனைத்து நிலுவைகளையும் செலுத்தி தீர்க்குமாறு உரிய தரப்பினரிற்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. |
| (ஆ) | 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ரூபா 8,572,652 வருமான நிலுவைகள் அறவிட சபையினால் ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | வருமான நிலுவைகள் அறவிட சபையினால் பொருத்தமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் | மானியம், நீதிமன்ற குற்றப்பணம், முத்திரை தீர்வை தவிர்ந்த அனைத்து நிலுவைகளையும் செலுத்தி தீர்க்குமாறு உரிய தரப்பினரிற்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| **(இ)** | பாதீட்டு மதிப்பீடானது சரியான முறையில் தயாரிக்காமலும் மதீப்பீட்டை சரியான முறையில் திட்டமிட்டு நிகழ்ச்சிப்படுத்தாமையுமே பாதீட்டு வருமானத்திற்கும் உண்மை வருமானத்திற்கும் இடையே ரூபா 40,870 தொடக்கம் 7,097,844 வரையான வேறுபாடு ஏற்பட்டிருந்தது. | பாதீடானது சரியான முறையில் தயாரிக்கப்பட வேண்டும். | எதிர்பார்க்கப்படாத வருமானங்கள் கிடைக்கப்பெற்றமையினாலும் மானியங்கள் தொடர்பில் மொத்த ஆளணியினரிற்கும் பாதீடு மேற்கொள்ளப்பட்டமையினாலும் வேறுபாடுகள் காணப்படுகின்றன. |

**2.2.3 வீதவரி மற்றும் வரி**

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 1988 ஆம் ஆண்டில் பிரதேச சபைகள் நிதி நிர்வாக ஒழுங்கு விதிகள் அத்தியாயம் III இனது பிரிவு 32 இன் பிரகாரம் சபையினால் மீளாய்வாண்டிற்கான ஆதன வரி மதிப்பீடு தொடர்பான மதிப்பீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருக்காமை அவதானிக்கப்பட்டிருந்தது. | சபையினால் பிரதேச சபைகள் நிதி நிர்வாக ஒழுங்கு விதிகளின் அறிவுறுத்தல்களுக்கமைய மதிப்பீட்டுப் பதிவேடு பேணுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும | பொது மக்களிடம் உரிய காணி ஆவணம் காணப்படாமையாலும் காணிக்கான பெறுமதி இற்றைப்படுத்தப்படாமையாலும் ஆதனவரி பெறமுடியாதுள்ளது. இருப்பினும் ஆதனவரி பெற்றுக்கொள்வதற்கான ஆரம்ப செயற்பாடுகளிற்காக பிரதேச செயலகத்திடமிருந்து தரவுகளைப் பெறுவதற்கு ஆவன செய்யப்பட்டுள்ளது. |

**2.2.4 வாடகைகள்**

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | சபையின் எல்லைக்குட்பட்ட அனைத்து கடைகளுக்குமான கடை வாடகை அறவிட சபையினால் ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை | கடை வாடகை அறவிட சபையினால் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் | நிலுவைகளை செலுத்தி தீர்க்குமாறு உரிய தரப்பினரிற்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. |
| (ஆ) | சபையின் எல்லைக்குட்பட்ட கடைகளின் வாடகை நிலுவைகள் ரூபா 1,565,690 தொகை கடந்த 04 ஆண்டுகளாக அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவை கடை வாடகை அறவிட சபையினால் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் மற்றும் இக்கடைகளை உரிய முறையில் பயன்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | குறித்த கடைத்தொகுதிகளிற்கு பல தடவைகள் கேள்வி அறிக்கை மற்றும் மீள் கேள்வி அறிவித்தல்கள் வெளியிடப்பட்ட போதும் எவரினாலும் கேள்வி கோரப்படவில்லை. எனினும், தற்போது சந்தைக் கடைகளில் மீளளிக்கமுடியாத தொகைப்பணம் செலுத்தாத கடைகளின் ஒப்பந்தமும் இரத்து செய்யப்பட்டுள்ளது. |
| (இ) | சபையின் எல்லைக்குட்பட்ட கடைகளின் மீளாய்வாண்டிற்கான குத்தகை நிலுவை ரூபா 20,883 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை. | சபையின் எல்லைக்குட்பட்ட கடைகளின் மீளாய்வாண்டிற்கான குத்தகை நிலுவை அறவிடப்படவேண்டும் | நிலுவைகளை செலுத்தி தீர்க்குமாறு உரிய தரப்பினரிற்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. |
| (ஈ) | சபையின் எல்லைக்குட்பட்ட நில வாடகை நிலுவைகள் ரூபா 229,050 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை | சபையின் எல்லைக்குட்பட்ட நில வாடகை நிலுவைகள் அறவிடப்படவேண்டும் | நிலுவைகளை செலுத்தி தீர்க்குமாறு உரிய தரப்பினரிற்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. |

### 2.2.5 அனுமதிப்பத்திரக் கட்டணங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| வியாபார அனுமதிப்பத்திரங்கள் தொடர்பில் 243 நிறுவனங்களுக்கு மாத்திரமே வியாபார அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டிருந்ததுடன் ஏனைய அனைத்து நிறுவனங்களிற்கு வியாபார அனுமதிப்பத்திரம் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | அனைத்து நிறுவனங்களிற்கு வியாபார அனுமதிப்பத்திரம் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படவேண்டும் | மீளாய்வாண்டில் சபையின் எல்லைக்குட்பட்ட 243 வியாபார நிலையங்களிற்கு வியாபார உரிமம்பத்திரம் வழங்கப்பட்டிருந்த போதிலும் எஞ்சிய வியாபார நிலையங்களிற்கு பொது சுகாதார பரிசோதகரின் பரிந்துரை இல்லாத காரணத்தால் உரிமம் வழங்கப்படவில்லை. குறித்த வியாபார நிலையங்களிற்கு கடிதம் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. |

### 2.2.6 ஏனைய வருமானம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| கடை வாடகை நிலுவைகள் தொடர்பில் தண்டப்பணம் அறவீடு செய்வதற்கு ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | தண்டப்பணம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டும் | தண்டப்பணம் அறவீடு செய்வதற்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. |

### 2.2.7 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணங்கள்

#### (அ) நீதிமன்ற தண்டப்பணம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மாகாண சபையின் பிரதம செயலாளர் மற்றும் அனைத்து அதிகாரிகளிடமிருந்து 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 6,461,470 தொகையான நீதிமன்ற தண்டப்பணம் பெறப்பட வேண்டியிருந்தன. | நீதிமன்ற தண்டப்பணம் பெற நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | நீதிமன்ற குற்றப்பணம், பெற்றுகொள்வதற்கு மாகாண இறைவரித்திணைக்களத்திற்கு கடிதம் மூலம் கோரிக்கை அனுப்பப்பட்டுள்ளது. |

#### (ஆ) முத்திரைக் கட்டணங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மாகாண சபையின் பிரதம செயலாளர் மற்றும் அனைத்து அதிகாரிகளிடமிருந்து 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 951,750 | முத்திரைக் கட்டணங்கள் பெற நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் | முத்திரை தீர்வை என்பவற்றை பெற்றுகொள்வதற்கு மாகாண இறைவரித்திணைக்களத்திற்கு கடிதம் மூலம் கோரிக்கை அனுப்பப்பட்டுள்ளது. |

தொகையான முத்திரைக் கட்டணங்கள் பெறப்பட வேண்டியிருந்தன.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 03 ஆம் பிரிவின் பிரகாரம், பொதுச் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொது வழிகள், மற்றும் மக்களின் சுகம், வசதி மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியதாக இருந்த பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பில் அவதானிக்கப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

**(அ) உப விதிகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 126 ஆம் பிரிவின் பிரகாரம், 30 முக்கிய விடயங்கள் தொடர்பில் உபவிதிகள் மேற்கொள்ளப்பட்டிருக்க வேண்டிய போதிலும் 2018 திசெம்பர் 31 வரையிலும் உப விதிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 126 ஆம் பிரிவின் பிரகாரம், 30 முக்கிய விடயங்கள் தொடர்பில் உப விதிகள் மேற்கொள்ளப்படவேண்டும் | 2018.09.05 இல் வெளியிடப்பட்ட வடமாகாணத்தின் துணைவிதி 2019.06.07 ஆம் திகதியே சபையால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது |

**(ஆ) செயல்நடவடிக்கைத் திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையினால் செயல்படுத்தப்பட்டிருக்க வேண்டிய செயற்பாடுகள் தொடர்பில் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | சபையினால் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்படவேண்டும் | இனிவரும் காலங்களில் திட்டம் மேற்கொள்வதற்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. |

### (இ) பணிகளை நிறைவேற்றலின் தாமதங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையினால் மேற்கொள்ளப்பட்ட 07 ஒப்பந்த வேலைகள் மீளாய்வாண்டில் முடிவுறுத்தப்பட்டிருக்காமைக்கான காரணங்கள் கணக்காய்விற்கு அறியக்கொடுக்கப்பட்டிருக்கவில்லை | வேலைகள் திட்டமிடப்பட்ட உரிய காலத்திற்குள் முடிவுறுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் | குறித்த வேலைகள் தொடர்பில் முடிவுறுத்தல் தொடர்பாக ஒப்பந்தகாரர்களிற்கு அறிவுறுத்தப்பட்டது. எனினும் அசாதாரண காரணங்களினால் கால நீடிப்பு வழங்கப்பட்டது. |

### (ஈ) திண்மக் கழிவு முகாமைத்துவம்

திண்மக் கழிவுகள் தொடர்பாக பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டது.

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| **(i)** | குப்பைகளை அகற்றுவதற்காக காணப்படுகின்ற இடங்களிற்கு சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெறப்பட்டிருக்கவில்லை. | பொருத்தமான முறையில் திண்மக்கழிவு முகாமைத்துவம் தயாரிக்கப்பட்டு கழிவுகள் வெவ்வேறாக ஒழுங்குப்படுத்தி மீள்பாவனை மற்றும் மீள்சுழற்சிக்கு உட்படுத்தி சூழலுக்கு பாதிப்படையாதவாறு செயற்படுத்தி இயற்கை உரம் தயாரித்தல் நடவடிக்கைகளை மேற்கொள்ளபட வேண்டும். | சுற்றாடல் அனுமதி பத்திரம் பெறுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது. |
| **(ii)** | சுகாதார தொழிலாளர்கள் வருடாந்தம் மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தப்பவில்லை. | | மருத்துவ பரிசோதனை இனிவரும் காலங்களில் மேற்கொள்ளப்படும். |
| **(iii)** | குப்பைகள் வெவ்வேறாக வகைப்படுத்தப்பட்டு சேகரிக்கப்படுவதில்லை. | | குப்பைகளை வெவ்வேறாக பிரித்து எடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. |
| **(iv)** | சபையின் குப்பைகளை கொட்டும் இடங்களிற்கு கொண்டுவரப்படுகின்ற குப்பைகளை வகைப்படுத்துவதற்கான வேலைத்திட்டமொன்று ஏற்படுத்தப்படவில்லை. | | குப்பைகளை வெவ்வேறாக பிரித்து எடுப்பதற்கு நடவடிக்கை திட்டம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. |
| **(v)** | திண்மக் கழிவுகள் மீள்சுழற்சிக்குட்படுத்தாது காணப்படுவதுடன் சூழல் பாதிப்படையக்கூடியவாறு தீ மூட்டி எரிக்கப்படுகின்றது. | | மீள் சுழற்றி மேற்கொள்வதற்கான போதிய வசதிகள் மற்றும் நிதி காணப்படவில்லை. |
| **(vi)** | திண்மக்கழிவு முகாமைத்துவத்திற்காக இடைக்கால சட்டமொன்று இயற்றப்பட்டிருக்கவில்லை. | | இனிவரும் காலங்களில் சட்ட விதிகள் கடைப்பிடிக்கப்படும். |
| **(vii)** | கழிவு முகாமைத்துவ திட்டமொன்று காணப்படவில்லை. | | நடவடிக்கை திட்டம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. |
| **(viii)** | சபையின் எல்லைக்குட்பட்ட பிரதேசத்தில் உள்ள கடைகள் மற்றும் குடியிருப்பாளர்களுக்கு குப்பைகள் வெவ்வேறாக வகைப்படுத்தி உறைகளில் இட்டு எடுத்து செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | | வகைப்படுத்தல் மேற்கொள்ளும் அளவு குப்பைகள் சேகரிக்கப்படுவதில்லை. |

### (உ) நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 ஏப்ரல் 23 ஆம் திகதிய க.செ.பொது/2018/61 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்கு சபையின் தயார்நிலைப்படுத்தல் தொடர்பான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை | சுற்றறிக்கையின் அறிவுறுத்தல்களுக்கமைய செயற்பட வேண்டும். | அறிவித்தல்கள் கிடைக்கப்பெறவில்லை. |

### 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| **(அ)** | சபையின் நிலையான வைப்புக்கள் தொடர்பாக 31 திசெம்பர் 2018 இல் முடிவுற்ற வருடத்திற்கான மீதிகளாகப் ரூபா 33,601,810 பெறுமதியான 10 வைப்புக்கள் உரிய நோக்கத்திற்கு பயன்படுத்தப்படாது தொடர்ந்து வைப்புக்களாக பேணப்பட்டு வருகின்றது. | நிலையான வைப்புக்களை குறித்த நோக்கத்திற்கு பயன்படுத்தல் வேண்டும். | ஆரம்ப காலப்பகுதியில் மொத்த ஆளணிக்காக மீள் நிரப்பப்பட்ட சம்பளத்தொகையில் மிகையான தொகை 2004, 2005 ஆண்டுகளில் நோக்கம் குறிக்கப்படாமல் 06 நிலையான வைப்பாக ஆரம்பிக்கப்பட்டுள்ளது. மற்றைய 04 நிலையான வைப்புக்களின் நோக்கம் நிறைவேற்றப்படாமையால் முடிவுறுத்தப்படவில்லை. |
| **(ஆ)** | கடன்கொடுத்தோருக்கு கொடுக்கப்பட வேண்டிய ரூபா 16,545,147 தொகை 31 திசெம்பர் 2018 வரை செலுத்தி தீர்க்க ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | கடன் கொடுத்தோருக்கு கொடுத்து தீர்க்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | ஒப்பந்த வேலைகள் முடிவுறுத்தப்படாத வேலைகளிற்கான கொடுப்பனவுகளான 16,097,150.28 மற்றும் மீளாய்வாண்டின் மார்கழி மாதத்திற்கான செலவினத்திற்கான பற்றுச்சீட்டுக்கள் பெற்றுக்கொள்ளப்படாமையால் ரூபா 447,996.90 செலுத்தி தீர்க்கப்படாமல் காணப்பட்டது. |

### 3.3 மனிதவள முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| **(அ)** | **பதவி வெற்றிடங்கள்** | | |
| | 2018 திசம்பர் 31 இல் உள்ளவாறான சபையின் 11 ஆளணி வெற்றிடங்கள் நிரப்பபட்டிருக்கவில்லை | ஆளணி வெற்றிடங்கள் நிரப்பபடவேண்டும் | பிரதிப் பிரதம செயலாளர் நிர்வாகம் அவர்களிடம் கோரிக்கை அனுப்பப்பட்டுள்ளது. |
| **(ஆ)** | **ஊழியர் கடன்கள்** | | |
| | சபையின் 02 அலுவலர்களுக்கு வழங்கப்பட் கடன்கள் ரூபா 94,384 தொகையினை கடந்த 05 வருடங்களுக்கு மேலாக அறவீடு செய்ய ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | உரிய கால ஒழுங்கில் கடன்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | குறித்த நபர்களை தொடர்புகொள்ள முடியாதுள்ளது. |

**3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**3.4.1 பராமரிப்பு மற்றும் திருத்தங்களினை மேற்கொள்ளத்தவறியமை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையின் EPHR 2742 இலக்கமுடைய மோட்டார் சைக்கிள் மற்றும் NPQR 6033 இலக்கமுடைய முச்சக்கரவண்டி நீண்டகாலமாக பாவனைக்கு ஏற்ற வகையில் திருத்தி பாவனையில் ஈடுபடுத்துவதற்கு நாளதுவரை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை | பாவனைக்கு ஏற்ற வகையில் திருத்துவதற்கு அல்லது அழிப்புச் செய்வதற்கான பொருத்தமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டும் | சபையின் EPHR 2742 இலக்க வாகனமானது கிழக்கு மாகாணம் ஒன்றிணைந்து காணப்பட்ட காலத்தில் வழங்கப்பட்டது. இதனை அழிப்புச் செய்வதற்கான அனுமதிக்கான விண்ணப்பம் அனுப்பப்பட்டுள்ளது. |

**3.4.2 சுவீகரிக்கப்படாத சொத்துக்கள்**

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| **(அ)** | சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், சபைக்குரிய காணி மற்றும் கட்டிடங்கள் தொடர்பாக வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டிராததுடன் காணி மற்றும் கட்டிடங்கள் பதிவேடும் சபையினால் முறையாக பராமரிக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே கிரமமாக காணி மற்றும் கட்டிடங்கள் மெய்மையாய்வு செய்யப்பட்டு சபைக்குச் சொந்தமான அவ்வாறான சொத்துக்கள் தொடர்பிலான உரிமை உறுதிப்படுத்தல் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | சபையின் பெயருக்கு உரிமை மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | காணி ஆவணங்கள் பெற்றுக்கொள்வதற்கான விண்ணப்பப்படிவங்கள் பிரதேச செயலாளரிற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. எனினும் எந்தவொரு ஆவணங்களும் கிடைக்கப்பெறவில்லை. |
| **(ஆ)** | சபைக்கு அன்பளிப்பு செய்யப்பட்டிருந்த 07 வாகனங்களினை சபைக்குரியதாக உரிமைமாற்றம் செய்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை | சபையின் பெயருக்கு உரிமை மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | உரிமம் மாற்றம் செய்யப்படாத வாகனங்களை உரிமம் மாற்றம் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது |

**3.4.3 விளைவற்ற சொத்துக்கள்**

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| **(அ)** | சபைக்கு வடக்கின் துரித மீளெழுச்சித் திட்டத்தினால் 12 ஆகஸ்ட் 2011 இல் | குறித்த நோக்கத்திற்கு பயன்படுத்தவதற்கு | குறித்த பேருந்து நிலைய கட்டட பயன்பாடு தொடர்பில் |

| | | | |
|---|---|---|---|
| | நிர்மாணிக்கப்பட்டு கையளிக்கப்பட்ட ரூபா 26,137,591 பெறுமதியான பேருந்து நிலையத்தினை பாவனைக்கு உட்படுத்துவதற்கு சபையினால் நாளது வரை எதுவித நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை | நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பலமுறை கேள்வி கோரியும் கடைகள் பயன்படுத்தப்படாது காணப்படுகின்றது. |
| **(ஆ)** | 2017 ஆம் ஆண்டு நன்கொடையாக பெறப்பட்ட இலத்திரனியல் மோட்டாரானது சபையினால் பயன்படுத்த நாளதுவரை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | குறித்த நோக்கத்திற்கு பயன்படுத்தவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | மருதோடை நீர் வழங்கல் திட்டத்தின் கீழ் பொருத்தப்பட்டிருக்கும் இலத்திரனியல் மோட்டாரிற்கு பதிலாக பெறப்பட்டது. இது நன்கொடையாக பெறப்படவில்லை மதிப்பீட்டிற்கு அமைவாகவே பெறப்பட்டது. |

**3.4.4 வருடாந்த பொருள் / இருப்பு மெய்மையாய்வு**

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| **(அ)** | நிதி ஒழுங்குவிதி 756 இன் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான வருடாந்த பொருட் கணக்கெடுப்பு சபையினது அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருப்பினும் நிதி ஒழுங்குவிதி 757 இன் பிரகாரம் மேற்கொள்ளப்பட்டிருக்க வேண்டிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை | நிதி ஒழுங்கு விதிகளுக்கு அமைய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | நடைமுறைப்படுத்துவதற்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. |
| **(ஆ)** | கடந்த வருடாந்த கணிப்பீட்டுச் சபையில் பாவனையிலீடுபடுத்த முடியாத எனக்குறிப்பிடப்பட்ட 16 வகையான பொருட்கள் தொடர்பாக 438 ஆம் இலக்க 2009 நவம்பர் 13 ஆந் திகதிய பொது நிதி சுற்றறிக்கைக்கு அமைய இவ்வறிக்கைத் திகதி வரை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை | சுற்றறிக்கையின் அறிவுறுத்தல்களுக்கமைய செயற்பட வேண்டும் | நடைமுறைப்படுத்துவதற்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. |

### 3.5 பெறுகை

#### 3.5.1 பெறுகைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் போது ரூபா 362,019 ஆன பெறுகை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், பெறுகைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை | பெறுகைத்திட்டம் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பெறுகைத்திட்டம் தயாாரிக்கப்படாத போதிலும் முறையான கூறுவிலைத்திட்டம் பின்பற்றப்பட்டு தளபாடங்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது. |

#### 3.5.2 ஒப்பந்த நிர்வாகம்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| **(அ)** | சபையினால் மீளாய்வாண்டுக்காக பாதீடப்பட்ட ரூபா 803,274 பெறுமதியான 15 ஒப்பந்த வேலைகள் மீளாய்வாண்டில் முடிவுறுத்தப்பட்டிருக்கவில்லை | ஒப்பந்த காலத்திற்குள் வேலையை முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | குறித்த ஒப்பந்தகாரர்களிற்கு ஒப்பந்த விதிகளிற்கமைவாக வேலையை முடிவுறுத்துவதற்கு அறிவிக்கப்பட்டிருந்தும் சீரற்ற காலநிலை வேறு காரணங்களால் முடிவுறுத்தப்படவில்லை. |
| **(ஆ)** | சபையினால் பாதீடப்படாமல் ஆரம்பிக்கப்பட்ட ரூபா 61,098 பெறுமதியான 02 ஒப்பந்த வேலைகள் மீளாய்வாண்டில் முடிவுறுத்தப்பட்டிருக்கவில்லை | ஒப்பந்த வேலைகள் பாதீடுவதற்கும் முடிவுறுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | முக்கிய தேவை காரணமாக சபையின் தீர்மானத்தின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டது. |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பாதீட்டு மதிப்பீடானது சரியான முறையில் தயாரிக்காமலும் மதீப்பீட்டை சரியான முறையில் திட்டமிட்டு நிகழ்ச்சிப்படுத்தாமையுமே பாதீட்டு செலவினத்திற்கும் உண்மை செலவினத்திற்கும் இடையே ரூபா 11,038 தொடக்கம் 7,527,351 வரையான வேறுபாடு ஏற்பட்டிருந்தது. | பாதீடானது வினைத்திறனான கட்டுப்பாட்டு கருவியாக பயன்படுத்தப்பட வேண்டும் | இனிவரும் காலங்களில் சரியான ஒப்பிடுகையின் மூலம் பாதீடு தயாரிக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது. |